# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## ECS 3.15 – ECONOMIC DEVELOPMENT - I

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அணுகுமுறைகளை சுருக்கமாக விபரிப்பதுடன், அவை ஒவ்வவொன்றினது சிறப்பம்சங்களையும், பலவீனங்களையும் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

02. மரபுசார் உற்பத்தித் துறையில் உற்பத்தி அளவைக் குறைக்காமலேயே அமைப்புசார் மாற்றமும், வளர்சியும் ஏற்படலாம் என்பதனை விளக்குவதற்கு லூயிஸ்-பே-ரனிஸ் (Lewis-Fei-Ranis) ஆகியோரால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகளின் நடைமுறைப்பொருத்தப்பாட்டை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

.03. முதலீட்டுக்கான கேள்வி, உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை ஆகியவற்றின் தரப்பிலிருந்து "உடைக்கமுடியாத" வறுமையின் நச்சு வட்டத்தினை உடைப்பதற்கு றக்னர் நேக்ஸ் (Ragner Nurks) அவர்களினால் வடிவமைக்கப்பட்ட ஒரு உபாயத்தின் குறிப்பிட்ட எண்ணக்கருக்களின் பயன்பாட்டுத்தன்மையினைப் பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

04. ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் நாடானது அதன் விவசாயத்துறையின் அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்தாது கைத்தொழில்மயம் அடைதல் சாத்தியமா? W.W. ரொஸ்ரோ (W.W. Rostow) அவர்களின் கருத்துரைகளைக் கவனத்திற் கொண்டு உமது விடையை விபரிக்குக.

(20 புள்ளிகள்)

05. கடந்த தசாப்த காலப்பகுதியில் இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களை (MDGs) அடைந்து கொள்வதில் எத்தகைய பங்களிப்பை வளங்கியுள்ளன என்பதனை நடைமுறை ஆதாரங்களின் துணையுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

06 (அ) சமச்சீரற்ற வளர்ச்சிக் கோட்பாட்டுக்கு சாதக, பாதகமான கருத்துக்களை விபரிக்குக (06 புள்ளிகள்)

(ஆ) ஹர்ஸ்மனின் (Hirschman) சமச்சீரற்ற வளர்ச்சிக் கோட்பாட்டில் கூறியுள்ள முதலீடு முன், பின் இணைப்புக்களின் அடிப்படையில் இடம்பெற வேண்டுமென்ற கருத்திலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? (04 புள்ளிகள்)

(இ) சமச்சீரற்ற வளர்ச்சிக் கோட்பாட்டைக் கையாண்டு பொருளாதாரத்தில் இடம்பெறக்கூடிய சமமின்மை பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு இட்டுச்செல்லும் என்பதனை வரைபடங்களின் துணையுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

07. (அ) பூரண வறுமை (Absolute Poverty), சார்பு வறுமை (Relative Poverty) ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(ஆ) வரைபடத்தின் உதவியுடன் குஸ்னட் வளையி எதனைக் குறிப்பிடுகின்றது என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(இ) சனத்தொகை வளர்ச்சிக்கும், வறுமைக்கும் இடையிலான தொடர்பை எவ்வாறு விளக்குவீர் (04 புள்ளிகள்)

(ஈ) Amartya Sen யினது கருத்துக்களின் துணையுடன் வறுமைக்கான காரணத்தை விபரிக்குக. (08 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பெழுதுக.

(அ) மானிட அபிவிருத்திச் சுட்டி (Human Development Index)

(ஆ) ஹரட்-டோமர் மாதிரியில் கத்திமுனைப்பண்பு

(இ) வருமானச் சமமின்மை பொருளாதார வளர்ச்சியின் மீது ஏற்படுத்தும் தாக்கம்

(ஈ) நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி (Sustainable Development)

(4×5= 20 புள்ளிகள்)